உ

கணபதி துணை:

காசிகாண்டம் கற்பிலக்கணங்

கூறிய அத்தியாயம்.

அதிவீரராமபாண்டிய ரியற்றிய

மூலமும்,

ஸ்ரீ ல ஸ்ரீ.

ஆத்துமாநந்த சுவாமிக ளியற்றிய

உரையும்,

வீரபாண்டியபுரம்,

வீ. வீரவாகு பிள்ளையால்,

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில்

அச்சிடலாயிற்று.

1925

உ

கணபதி துணை.

காசிகாண்டம் கற்பிலக்கணங்

கூறிய அத்தியாயம்.

அதிவீரராமபாண்டியரியற்றிய

மூலமும்,

ஸ்ரீ ல ஸ்ரீ.

ஆத்துமாநந்த சுவாமிகளியற்றிய

உரையும்,

வீரபாண்டியபுரம்,

வீ. வீரவாகு பிள்ளையால்,

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில்

அச்சிடலாயிற்று.

ரிஜிஸ்தர் செய்தது] [இதன் விலை அணா 4.

1925

உ

ஓம், தத், ஸத.

விஞ்ஞாபனம்.

கற்பிலக்கணம் என்னும் நூல், பெண்களுக்கு இன்றியமையாதது.

இது அதிவீரராமபாண்டியரியற்றிய காசிகாண்டம் என்னும் பெரிய நூலிலுள்ளது, ஷை நூலைத் தனவான்களன்றி ஏனையோரும் வாங்கி வாசித்து அதன்படி நடக்க மார்க்கமில்லாது, மேனாட்டு ஆசாரத்தைப் பின்பற்றி, இல்லறவொழுக்கம் நாளுக்கு நாள், (மாமிச பக்ஷணஞ் செய்வார் தவங் குறைவுபட்டுத் தேய்வதுபோல்,), குன்றிவருவதை நன்குணர்ந்து, ம-' -"-ஸ்ரீ பென்ஷன் அயலூர் ரிஸர்வ் பாரஷ்டர் பிள்ளையவர்கள், ஷை நூலுக்கு உரையெழுதிக் கொடுக்கும்படி, ஸ்ரீலஸ்ரீ ஆத்துமாநந்த சுவாமிகள் சன்னிதானத்தில் விண்ணப்பஞ் செய்யக், கருணை மேற்கொண்டு, ஷை சுவாமிகளால் யாவருக்கும் புலப்படுமாறு, உரையெழுதியதை, என்னால் புருப் பார்த்துப், பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில், அச்சியற்றி, வெளியிடலாயிற்று.

ஷை சுவாமிகளால், கைவல்யவசனம், ஆத்துமாநந்த விளக்க மூலமும் உரையும், "ஆர்கலியுலகத்து மக்கட் கெல்லா, மோதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை" என்னு முது

மொழிக்காஞ்சிக்கு வியாக்கியானமான பிரசங்கம், பசுவாசக அம்மானை, கூடலந்தாதி, பசுந்தைபந்தாதி, இன்னும் அநேக அரிதான நூல்களியற்றி யிருப்பதை அச்சியற்றப் பேரறி வாய்ந்த கனதனவான்கள் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சீற்குருமூர்த்தி துணை.

"காவி நீறுங் கவினுறுங் கண்மணி
மேவு கின்றிவான் மாநந்த மெய்த்தவன்
பூவை யுற்ற மரையடிப் போதினை
நாவி னூற்சொல நல்கிடு நன்மையே."

16—1—1925
பாளையங்கோட்டை.
இரத்தாக்ஷி ஹு
மகரரவி சஉ.

இங்ஙனம்,
வீ. வீரவாகுபிள்ளை,
வீரபாண்டியபுரம்,
சக்கம்மாள்புரம் போஸ்டு,
தட்டப்பாரை ரெயில்வே.

உ

கணபதி துணை.

காசிகாண்டம்

கற்பிலக்கணங்

கூறிய அத்தியாயம்.

காப்பு.

மாற்றரிய தொல்பிறவி மறிகடலி னிடைப்பட்டுப்
போற்றுறுதன் குரைகழற்றுட் புணைபற்றிக் கிடந்தோரைச்
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக்
காற்றெறியுந் தழைசெவிய கடாக்களிற்றை வணங்குவாம்.

கற்பிலக்கணங் கூறிய அத்தியாய வரலாறு.

முன்னொரு காலத்தில் நாரத முனிவர் விந்தகிரியை யடைந்த சமையத்தில், அவ்விந்த மலையானது மனித வுருக்கொண்டு எதிர்சென் றழைத்துப்போய், நாரதருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து ஆசன மளித்திருக்கச் செய்து அவரிருந்தபொழுது அவரிடத்து மேரு முதலிய எல்லா மலைகளும் எனக்கு நிகராகுமா, யானே எல்லா மலைகளிலும் உயர்ந்தவன் என்று தன்னைப் பெருமை படுத்திக் கூறியது.

அதைக் கேட்ட நாரதமுனிவர் விந்தகிரி செருக்கடைந் திருத்தலைக் கண்டு, இம்மலைக் குண்டாகிய இச்செருக்கு எச்செயலாற் றொலையுமென் றாராய்ந்து, அச்செயல் அம்மலைக் குளதாகும்படி அவ்விந்தகிரியை அழைத்து, ஓ விந்தமே? யான் மேருமலையினிடத்திற் போயிருந்தேன், அக்காலத்தில் அம்மேரு மலையானது எவ்வளவோ, பெருமை யடைந்திருக்கிற உன்னை மதிக்காமல், சூரிய சந்திரர்களெல்லாம் என்னையே வலமாகச் சுற்றி வருகின்றபடியினாலே, எந்த

மலையும் எனக்கு நிகராகுமோ? அப்படியிருக்க, ஏதோ விந்தகிரி தன்னை எல்லா மலைகளிலும் பெருமையுடையதாக மதித்து, வீண் செருக் கடைந்திருக்கிறது என்று உன்னை மிக இழிவாசக் கூறியது.

அதைக் கேட்டவுடன் என் மனம் பொறுக்காமல், உன்னிடம் வந்து தெரிவித்தேன் என்று விந்தமலைக்குப் பெருஞ்சின முண்டா கும்படி சொல்லிவிட்டுத், தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

உடனே அவ்விந்தகிரிக்குக் கோபமெழுந்து இந்த மேருமலைக்கு இவ்வளவு கருவமும், சூரிய சந்திரர் தன்னை வலமாக வருதலால் அல்லவா உண்டாயிற்று, ஆதலாற் சூரிய சந்திரர் செல்லவொட்டா மற் றடுத்து விடுகிறேனென்று, ஆகாய மறையும்படி வளர்ந்து தடுத்து விட்டபடியால், சூரியனோட்டந் தடைப்பட்டது.

படவே, இரவு பகல் மாறி மாறி வருதலின்றிச் சூரியனுள்ள பக்கமெல்லாம் வெய்யிலாலும், சூரியனில்லாத பக்கமெல்லாம் இருளாலும், ஜீவர்கள் கஷ்டமடைய, அதனால் உலகத்திற் செய்யக்கூடிய சற்கருமங்களொன்று நடவாமையால், அவற்றின் பயனாற் றிருப்தி யடையக்கூடிய தேவேந்திராதி தேவர்கள் வருந்திப், பிரமதேவரிடஞ் சென்று, தங்களுக்கு நேர்ந்த வருத்தத்தைக் கூற, அதைக் கேட்டு, அப்பிரமதேவர் தேவர்களைப் பார்த்து, இக்குறையை நீங்கள் எல்லோரும் அகத்திய முனிவரிடஞ் சென்று கூறுவீராயின், அவர் தீர்த்தருளுவாரென்று, விடைகொடுத்தருளினார்.

அவர் சொற்படியே, தேவேந்திராதி தேவர்கள், தமது குருவாகிய வியாழ பகவானோடு, அகத்திய முனிவரிடஞ் சென்று, அவரைத் துதித்து, அவருகில் வீற்றிருந்த உலோபா முத்திரையென்னுந் தாயைக் கண்டு, அவள் கற்பை வியந்து துதித்து, அவ்வகத்திய முனிவரால், விந்தமலையின் கருவமடங்கச் செய்து, தேவர்கள் பழையபடி சுகித்து வாழ்ந்திருந்தனர்.

கற்பிலக்கணங் கூறிய அத்தியாய வரலாறு முற்றிற்று.

கணபதி துணை.

கற்பிலக்கணம்.

உரையாசிரிய ரியற்றிய காப்பு.

தும்பி மாமுகத்
தெம்பி ரானருட்
செம்ப தாம்புய
நம்பி யுய்குவாம்.

நூல்.

அவதாரிகை [முன்னொரு காலத்தில் நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள், தமக்கு அகத்திய முனிவர் விந்தமலையை யடக்கிய சரித்திரத்தைச் சொல்ல வாரம்பித்த சூதபுராணிகரை நோக்கி, அகத்திய முனிவரிடம் தங்கள் துன்பமொழித்தற்காக வந்த இந்திராதி தேவர்கள், யாது கூறினரெனக் கேட்க, அந்த நைமிசாரணிய முனிவர்களுக்கு, அச்சூத புராணிகர் சொல்லத் தொடங்குதல்.]

தீதெ றிந்த தமிழ்முனி செப்பலும்
யாது சொற்றனர் விண்ணவ ரென்றருள்
மாத வத்தினர் கேட்ப மகிழ்வுடன்
சூத மாமுனி சொல்லலுற் றுனரோ.

முக்குற்றங்களையும் போக்கியவரும் தமிழ்ப் பாஷையின் கர்த்தாவுமாகிய அகத்திய முனிவர் (தம்மிடத்து வந்த தேவர்கட்கிருக்கை கொடுத்து) உபசாரவார்த்தை கூறியபின், தேவேந்திராதி அத்தேவர்கள், அவ்வகத்திய முனிவரிடத்து யாது கூறினரென்று கிருபா சொரூபிகளாகிய, நைமிசாரணிய வனத்தில் வசிக்கும் முனிவரர் கேட்கச் சூதமகாமுனிவர் அதற்கு விடைகூறுகின்றார். என்றவாறு. (க)

அ-கை. [தேவர்கள் தாங்கள் எண்ணிவந்த காரியத்தை அகத்திய முனிவரிடங் கூறுமாறு தமது குருவிற்குக் குறிப்பித்தமை கூறுதல்.]

அரிய நான்மறை தேரு மகத்திய ன்
பரிவி னன்மொழி கேட்டலும் பண்புடை க்
குரவன் வாண்முக நோக்கினர் கோதி லா
விருவி சும்பி னிமையவர் யாரு மே. (உ)

குற்றமற்ற விண்ணுலக வாசிகளாகிய தேவர்கள் யாவரும், அறிதற்கரிய நான்கு வேதங்களையு நன்குணர்ந்த அகத்திய முனிவர், அன்புடன் கூறிய, இனிமையாகிய வாக்கியங்களைக் கேட்டவளவில், யாம் வந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்னுங் குறிப்புத் தோன்றத், தமது குருவாகிய நற்குணமமைந்த வியாழபகவானுடைய ஒளிபொருந்திய முகத்தைப் பார்த்தார்கள். எ-று. (உ)

அ-கை. [தேவர் குறிப்பித்த விஷயத்தை வியாழபகவான் கூறவாரம்பித்தல்.]

பனிவி சும்பி னிழிந்து பரிவொடு ம்
புனைக ருங்கழல் விண்ணவர் போந்த மை
முனிவ கேட்டி மொழிகுவல் யானெ ன
வினிதி னந்தண னோக்கி யியம்புவா ன். (ங)

வியாழபகவான் அகத்திய முனிவரை மகிழ்ச்சியுடன் பார்த்து, வீரக்கழலணிந்த பாதங்களையுடைய இத்தேவர்கள் வருத்தத்துடன் உமதிடத்தில் வந்த காரியத்தைக் கூறுவேன், முனிவர் சிகாமணியே, கேட்டருள்வீரென்று சொல்லவாரம்பித்தார். எ-று. (ங)

அ-கை. [இதுவுமது]

மன்னு கானினு மோங்கு வரையி ஓு
முன்ன ருந்தவ மாற்று முனிவ ரி
லன்ன மூர்தியை யன்றி யருந்த வ
நின்னை யொப்பவர் நீணிலத் தியாவ ரே. (௪)

அரிய தவத்தினையுடைய அகத்திய முனிவரே, உம்மை யொப்பானவர், அன்னவாகனத்தையுடைய பிரமதேவ ரொருவரே யல்லாமல், இந்த நிலவுலகத்தின்கண் வனங்களிலும், மலைகளிலுமிருந்து அருமையாகிய தவத்தினைச் செய்யும் முனிவர்களில், யாவரிருக்கின்றனர்? ஒருவருமிலர். எ-று. (௪)

அ-கை. [இதுவுமது]

கங்கை சூடிய கண்ணுதற் சாமித ன்
பொங்கு பேரருள் பூண்ட வருந்த வ
வங்கண் வானத் தமரர் குறையுறி ன்
எங்கு மேவுவர் நின்னிடத் தன்றி யே. (௫)

சிரசிற் கங்கை சூடியவரும் நெற்றியிற் கண்ணுடையவருமாகிய சிவபெருமானுடைய திருவருளை மிகுதியாகப் பெற்றிருக்கின்ற அகத்திய முனிவரே, தேவர்கள் யாதாயினுமோர் துன்பமுற்றாராயின், அதைப் போக்குவதற்கு உமதிடத்தன்றி வேறெவ்விடத்தைச் சார்வார்? வேறெங்குஞ் சாரார், உம்மையே சார்வார். எ-று. (௫)

அ-கை. [வேறு யாவரிடமும் செல்லாது அகத்திய முனிவரிடஞ் சென்றமைக்குக் காரணங் கூறுகின்றார்.]

செயிரில் கற்பின் றிகழ்மணிக் குன்ற னை
மயிலன் னுணின் மனைக்குரி யாளெ னி
லுயா ருந்தவ் வுன்ற னுளத்தி டை
முயலி லேது முடித்தற் கரிய தே. (௬)

செய்தற்கரிய உயர்ந்த தவமுடைய அகத்திய முனிவரே, தேவர்கள் எக்காரணத்தால் உம்மை யடைந்தாரெனின், குற்றமற்ற கற்பினால் மாணிக்க மலைபோல எவ்வுலகத்தும் விளங்குகின்றவளும், மயில் போலுஞ் சாயலுடையவளுமாகிய, உலோபாமுத்திரை யென்னு நாமமுடைய தாயானவள், உமது இல்லறத்திற் குரியவளா யிருத்தலால், உமது மனத்தால் முயற்சி செய்ய நினைக்கில், முடித் தற்கரிய காரியம் எதுவும் இல்லை, எல்லாக் காரியமும் எளிதின் முடிவுபெறும். எ-று. (சு)

குன்றை உவமித்ததால் அவ்வம்மையினது கற்பின் மேய குணங் களுக்குக் கலங்கா நிலையுடைமையும், பிறராலளத்தற் கருமையுடை மையும், உளவாமென்பதும் மணிக்குன்றென்றதால் மாணிக்கம் போலத், தனது குணங்களை அன்னியமாதர் பெருஞ் சிறப்புடைமை யும், அன்னிய மாதரது குணங்களாற் றான்பற்றப்படாமையும், உள என்பதும் காட்டப்பட்டன.

[தா-ம்.]

வியாழபகவான், நினது தவவலியாலும், நின்மனைவியினது கற் பின் வலியாலும், எவ்வளவு பெரிய காரியமும் எளிதின்முடிக்கும் ஆற் றலுடைய நின்னால் மாத்திரமே, தேவர்கள் துன்ப நிச்சயமாக நீங்கு மெனக் கருதி நின்னிடம் வந்தனரெனப், புகழ்ச்சிக் குறிப்பாலறி வித்தான் என்பார். "செயிரில் கற்பின் றிகழ்மணிக் குன்றனை, மயி லன்னானின் மனைக்குரியாளெனி, லுயர ருந்தவ வுன்ற னுளத்திடை, முயலிலேது முடித்தற் கரியதே" எனக் கூறினர். தவவலி, ௩௫-வது கவியில் "முன்ன மேகட லுண்ட முனிவர" என்றதாற் பெறப்படு தல் காண்க. கற்பின்வலி, உஅ, உக, ௩௪, ௩௬-வது கவிகளிற் காண்க.

அ-கை. [ஆனால் வேறேயும் பல கற்புடைய மாதர் இருக்கின் றனரே, அவரை மனைவியாகக் கொண்டவராலும், எல்லாக் காரியமு

முடிவுபெறக்கூடுமாதலால், அவரிடத்துச் செல்லலாகாதோவெனின், அதற்கு மேற்கூறுகின்றார்.]

விளங்க ருந்ததி மேனை சுநீதிபு ட்
டுளங்கு சாவித் திரியன சூயைநி ன்
களங்க மற்றதோர் கற்புடை யாளொ டு
முளம்பொ ருந்தி நிகர்சொல வொண்ணுமோ .(எ)

அருந்ததி, மேனாதேவி, சுநீதி, சாவித்திரி, அனசூயை, ஆகிய இப்பெண்களும் கற்புடையாரென்று கூறப்படுகின்றார், ஆயினும், குற்றமற்றதும் ஒப்புயர்வற்றதுமான கற்பினை யுடையவளாகிய, இந்த பத்தினியோடு சமானமாவரென்று, மனமிசைந்துசொல்லக்கூடுமோ? கூடாது. எ-று. (எ)

இவள் குற்றமற்றுயர்ந்த கற்பினை யுடையாளெனவே மற்றவர் தாழ்ந்த கற்புடையா ரென்பது பெறப்படுதலின், அவர்களுடைய கணவர்களால், எல்லாக் காரியமுஞ் செய்துமுடித்தல்கூடாதென்பதறிந்து சென்றாரில்லை யென்பது கருத்து.

ஆ-கை. [இனிக் கற்புடையார் குணங்களைக் கூறுகின்றார்.]

கொழுந னுண்டபின் றானுகர் கொள்கையு ம்
விழிது யின்றபின் றுஞ்சலு மென்று யி
லெழுதன் முன்ன மெழுதலு மேயன் றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கை யே. (அ)

குற்றமற்ற கற்புடைய மங்கையர் செய்கைகளாவன, தமது கொழுநருண்டபின்பு தாமுண்ணுதலும், அவர் நித்திரை செய்தபின்பு தாநித்திரை செய்தலும், அவர் நித்திரைவிட்டெழுவதன்முன் தாநித்திரைவிட்டெழுதலுமாம். எ-று. (அ)

இதுபற்றியே திருவள்ளுவ நாயனர், தனது மனைவி யிறந்த காலத்தில், "அடிசிற் கினியாளே யன்புடையாளே, படிசொற் றவருத பாவா—யடிவருடிப், பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ, என்றூங்கு மென்க ணிரா" என அவளது கற்பு நிரம்பிய நற்குண நற்செயல்களைப் புகழ்ந்தமையறிக.

அ-கை. [இதுவுமது]

எரிம ணிப்பொலம் பூண்சுமந் தின்னுயிர் க்
குரிய கேள்வ ருவப்பமுன் னெய்துவா ர்
பிரியுங் காலையிற் பெய்கலன் யாவை யு
மொருவி மாசுட லுண்டிட வைகுவா ர். (கூ)

மேலும் அக்கற்புடைய மாதர் கணவரோடு கூடி வசிக்கிற காலத்தில், பிரகாசிக்கின்ற இரத்தினத்திலும், பொன்னிலும் செய்யப்பட்ட ஆபரணங்களாற் றம்மை யலங்கரித்துத், தமது உயிர்போல் விரும்புதற்குரிய நாயகர் பார்த்து மகிழும்படி, அவர் எதிரிற் செல்வார்கள். அப்படியில்லாமல் அவர் தம்மைவிட்டுப் பிரிவாராயின், அக்காலத்தில் தாமுன்னணிந்திருந்த ஆபரணங்களனைத்தையும் நீக்கித், தமதுடல் புழுதிபடும்படி இருப்பார்கள். எ-று. (கூ)

அ-கை. [இதுவுமது]

இனிய கேள்வர் முனியி னெதிர்நின் று
துனிகொ ளைஞசொ டெதிர்மொழி சொல்கி லா
ரனைய கேள்வ ரெறியினு மன்பொடு ங்
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாத ரே.(ω)

மேலும் அக்கற்புடையார், பிரியமுடைய நாயகர் தம்மைக் கோபிக்குங் காலத்தில், அவருக்கெதிரே நிற்றலும், மனத்திற் கோபங் கொள்ளுதலும், பதில் வார்த்தை சொல்லுதலுஞ் செய்யார், ஒரு

வேளை அவர் தம்மை அடித்தாலும் அவர் கோபமாறும்படி அன்பு பாராட்டி மனமிரங்குவார். எ-று. (௰)

அ-கை. [இதுவுமது]

எய்து மிற்றுறந் தேகல ரில்லக
லைய லார்முகங் காணினுஞ் சாம்புவா
ரையில் காதலர் வந்தெவை யாயினுஞ்
செய்தி ரென்றலுஞ் செய்தன மென்பரால். (௰௧)

மேலும் அக்கற்புடைய மாதர் தாம் வசிக்கின்ற மனையை விட்டு அயலிடங்கட்குச் செல்லார், இல்லறவொழுக்கத்திற் றவறிய பெண்கள் முகத்தைப் பார்க்கவும் மனங்கூசுவார்கள், குற்றமில்லாத தமது கணவர் வந்து வீட்டுக் காரியங்களில் எதையாயினுஞ் செய்யுங்களென்று சொல்லுவாராயின், அது அக்காலத்திற் செய்து முடியாதிருந்தாலும், அதனைச் செய்து முடிக்கவில்லையென்றுவது, இனிச் செய்து முடிப்பேமென்றுவது சொல்லாமல், செய்தாய் விட்டதென்று சொல்லி, உடனே செய்து முடிப்பார். எ-று. (௰௧)

அ-கை. [இதுவுமது]

விழவு கண்ணுறன் மேதகு நோன்புறல்
பழுதிற் றூநதி யாடுதல் பண்ணவர்த்
தொழுது வாழ்த்துதன் முமறு கற்பினோர்
கொழுந ரேவலி னன்றிக் குறிக்கொளார். (௰௨)

மேலும் அக்கற்புடைய மாதர் திருவிழாப் பார்த்தல், மேன்மையைக் கொடுக்கும் விரதம் அனுட்டித்தல், சித்தத்தைச் சுத்திபண்ணுவதாகிய கங்கை முதலிய தீர்த்தமாடுதல், கடவுளைத்தொழுது துதித்தல், ஆகிய இவற்றைத் தமது கொழுநர் செய்யும்படி கட்டளையிட்டாலன்றித், தாமாகச் செய்யவேண்டுமென்று மனத்தா னினைக்கவு மாட்டார். எ-று. (௰௨)

ஆனால் அவர்க்கு இப்படிப்பட்ட சற்கருமங்கள் ஒன்றுஞ் செய்ய வேண்டாவோவெனின், அது, மேல் இருபதாவது செய்யுளிற் சொல்லப்படும், அங்குக் கண்டுகொள்க.

அ-கை [இதுவுமது]

வளையுந் தங்கலன் மாற்றவட் கீயி னு
முனிவு செய்கலர் மூப்பினர்‡ச் சேர்வுறு த்
தனியிற் சேர்கலர் தாம்பிற ரிற்புகா ர்
புனித நெஞ்சுடைப் புண்ணிய மாத ரே. (௰௩)

மேலும் பரிசுத்த மனமுடைய அப்புண்ணியவதிகள், தாம் அணிந்திருந்த ஆபரணங்களைத் தமது கொழுநர் *மாற்றாளுக்குக் கொடுத்தனராயினும், அதுபற்றிக் கோபம் வையார்கள், அயலார் வீட்டிற்குத் தாம் போகவேண்டிய காரியமிருந்தாலும், கணவர் கட்டளையிட்டாற் செல்லுவதன்றித் தாமாகச் செல்லார், அவ்வாறு செல்லினும் முதிய பெண்களோடு செல்லுவதன்றித் தனியாகச் செல்லார். எ-று. (௰௩)

‡ மூலத்திற் சகார வொற்றில்லாதிருந்தால் முதியோரில்லாத வீட்டுக்குச் செல்லார் என அருத்தங்கொள்ளவேண்டும்.

* மாற்றாள் = சககளத்தி. போகமாது என்பதே துணிவு

அ-கை [இதுவுமது]

திருந்து மாயுள் சிதையுமென் றெண்ணித்த ம்
பொருந்து காதலர் நாமம் புகன்றி டா
ரிருந்த போதன்றித் தாமு னிருந்தி டா
ரருந்து மிச்சி லமிழ்தி னுகர்வா ல். (௰௪)

மேலும் தம்மனமொத்த காதலருடைய பெயரைச் சொல்லினால் ஆயுள் குறையுமென நினைத்து அவர் பெயரைச் சொல்லார்,

அவர் இருந்தபோது தாமிருப்ப தன்றி, அவர் நிற்கும் போதிரார், அவருண்டு மிகுந்த உச்சிட்டத்தை அமுதம்போல நினைத்து விருப்பத்துடன் உண்பார். எ. று. (கச)

குஷ்டரோகியாகிய தனது நாயகன் புசிக்குங்கால் அழுகி அந்நத்துடன் விழுந்துகிடந்த விரலினது குறைத்துண்டைப் பரிகலத்தின் ஓர் பக்கத்தெடுத்து வைத்துவிட்டு, அவ்வுச்சிட்டத்தை விருப்பத்துட னுண்ட நளாயினியின் செயல் இங்குங் கவனிக்கற்பாலது.

அ-கை [இதுவமது]

அறந்த வாத்தம தன்ப ரருளினா ற்
றுறந்து ளோர்பிறப் போர்தொழில் செய்குன ர்
சிறந்த தொல்குலத் தெய்வம் பசுவிரு ந்
திறந்து ளோர்க்கும் பகுத்தினி துண்பா ல். (டுரு)

மேலும் அக்கற்புடைய மாதர் இல்லற நெறியில் வழுவுத லில்லாத தமது பத்தாவின் கட்டளையினால் துறவிகளுக்கும், தாம் பிறந்த வீட்டிற்குரியவருக்கும், (தாய் தந்தை முதலியோரென்றபடி) ஏவலாளருக்கும், தங்குலத்திற் குரிய தெய்வத்திற்கும், பசுக்களுக்கும், விருந்தினருக்கும், பிதிர்க்களுக்கும் கொடுக்கவேண்டிய முறைப்படி கொடுத்துத் திருப்திசெய்து தாம் புசிப்பார். எ-று. (டுரு)

அ-கை [இதுவமது]

மேவு காதல ருள்ளம் விழைந்த ன
வேவு முன்னர்க் குறிப்பி னியற்றுவா ர்
தாவி லன்பர் தமையலர் தூற்றிடு ம்
பூவை யன்னவர் புன்முக நோக்கிலா ர். (டுசு)

மேலும் விருப்பமுடைய தமது காதலர் மனத்தால் விரும்பிய வைகளைச் செய்யும்படி, அவர் ஏவுதற்கு முன்பே குறிப்பாலறிந்து

செய்வார். பத்தாமீது பழிச்சொற் கூறும் பெண்கள், கிளிபோலு மினிய மொழி யுடையாராயினும், அற்பச் செய்கையுடைய் அவர் முகத்தைப் பாரார். எ-று. (கசு)

அ-கை [இதுவுமது]

இல்ல றத்திற் கியைவன வீட்டு வா
ரல்ல செய்தே வறிதி னழித்திடா ர்
புல்லு காதல ராயுட் பொலிவு ற
மல்ல லோங்கணி மஞ்ச ளணிவரா ல். (யஎ)

மேலும் அக்கற்புடைய மாதர் தமது வரவிற்குத் தக்க பொருளைக்கொண்டு, வீட்டுக் காரியத்திற்கு வேண்டும் சாமான்களை வாங்கிவைப்பார், தகாத காரியங்களைச் செய்து வீண் செலவு பண்ணார், தமது மனப் பொருத்தமுடைய காதலருடைய ஆயுள் விருத்தியாகும் பொருட்டு வலிமையைத் தருகின்ற மஞ்சளைப் பூசிக் குளிப்பார்கள். எ-று. (யஎ)

அ-கை [இதுவுமது]

வசையில் காதலர் தாய்தந்தை வைகு றி
லசதி யாடில ரன்ப ரழைத்திடி ன்
மிசையு நல்லமு தேனும் விடுத்து ள
நசையி னோடும் பொருக்கென நண்ணுவார். (யஅ)

மேலுந் தமது கொழுநரைப் பெற்றவராகிய மாமனார், மாமியார் எதிரிற் சிரித்துப் பேசார். கொழுநர் தம்மை அழைத்தாராயின், அப்பொழுது அமுதத்தை யொத்த அருமையான உணவைப் புசித்துக்கொண்டிருந்தா ராயினும், அதை விடுத்து மனத்தில் வெறுப்பில்லாமல் விரைவில் அவரருகில் வந்து நிற்பார். எ-று. (யஅ)

அ-கை. [இதுவுமது]

உரலி லம்மியி லோங்கு முலக்கையி .ற்
பாவும் வாயிற் படியின் முறத்தினி ற்
றிருவ கன்றிடு மாலெனச் சேர்ந்திரா ர்
பொருவில் கற்புடைப் புண்ணிய மாத ரே. (௰௬)

மேலும் ஒப்பற்ற கற்புடைய மாதர், உரலிலாவது, அம்மியிலாவது, உலக்கையிலாவது, வாயிற்படியிலாவது, முறத்தி (சுளகி) லாவது இருந்தால் தம்மிடத்திருக்கின்ற இலக்குமி நீங்கி விடுவாளென்று நினைத்து அவற்றின்மீதிருக்கமாட்டார். எ-று. (௰௬)

அ-கை [காதலன் கட்டளைப்படி நடத்தலே கற்புடை மாதருக்கு எல்லாச் சற்கருமங்களும் ஆம் எனக் கூறுகின்றார்.]

கொழுநன் சொற்கட வாதுறை கொள்கை யே
வழுவி னல்லறம் வான்றவ மாற்று த
ழெழுது தெய்வம் பராய்மலர் தூவுத ல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்ப வே. (௨௰)

மேலும் அக்கற்புடைய மாதருக்குத் தமது கொழுநருடைய சொற்படி நடத்தலே விரதமாகக்கொண்டு வாழ்த லொன்றுமே, குற்றமற்ற உயர்ந்த தருமமும், பெருமையைத் தருகின்ற நோன்பும், கடவுளைத் தொழுது மலர்களா லருச்சித்தலும், ஆகிய இவைமுதலிய சற்கருமங்களைச் செய்த பயன்களெல்லாவற்றையுந் தரும். எ-று. (௨௰)

ஆதலால் அவருக்குப் பத்தாவின் பணிவிடையொன்று மாத்திரமே எல்லாச் சற்கருமங்களின் பயனையுங் கொடுத்து விடுதலால், அதற் கன்னியமாக யாதொரு சற்கருமமுஞ் செய்யவேண்டுவதில்லையென்பதாயிற்று, இதுவே (௰௨-வது) செய்யுளால் வந்த சங்கைக்குச் சமாதான மெனவறிக.

அ-கை [கற்புடைமாதர் கொழுநரிடத்துக் குறையுளதேனும் கூறாரெனல்].

அழகின் வீக்கஞ் சிறிதில ராயினு
மொழிவி னோய்நிரம் புற்றன ராயினுங்
கிழவுத் தன்மைய ராயினுங் கேளவரைப்
பழுது சொல்கலர் பண்பின் முயங்குவார். (உக)

மேலுந் தமது கொழுநர் கொஞ்சமும் அழகில்லாதவரானாலும், நீரா வியாதியர்ளரானாலும், கிழப்பருவமுடையாரானாலும், அவரை விருப்பமுடன் தழுவுவதல்லது, அவரிடத்துள்ள அக்குற்றங்களைப் பிறரிடஞ் சொல்லார். எ-று. (உக)

அ-கை. [கற்புடைமாதர் கொழுநரடையும் சுகதுக்கங்களை தாமு மடைவா ரெனல்].

அன்பர் துஞ்சிடிற் றுஞ்சுத லாங்கவர்
துன்ப மெய்திடிற் றுமுமத் துன்புற
லின்ப முற்றிடி லின்புற் றிருத்தலே
மன்பெ ருந்தவக் கற்புடை மாதர்க்கே. (உஉ)

மேலும் கற்புடைய மாதருக்குப் பத்தா இறந்தாற் றாமும் இறத்தலும், அவர் துன்பம் அடைந்தாற் றாமுந் துன்பமடைதலும், அவர் சுகமாயிருந்தாற் றாமுஞ் சுகமாயிருத்தலுமே, நிலைபெற்ற பயனைத் தருகின்ற மகத்தாகிய தவமாம். எ-று. [உஉ]

அ-கை. [கற்புடைமாதர் கொழுநரை விஷ்ணுவெனவும், அவர் கால் கழுவிய நீர் அவரிடத்துப் பிறந்த கங்கையெனவும், நிச்சயித்துத் தியானித்தல் முதலியன செய்வாரெனல்.]

வாள்வி ழிக்குல மங்கைய ரன்பர் பொ ற்
ருள்வி ளக்கிய தண்புனல் கங்கைய க்
கேள்வ ரேகிளர் தேவர்கண் மூவ ரி
லாளு மெய்ம்மை யடிகளென் றெண்ணுவா ர். (உ௩)

மேலும் நற்குலத்திற் பிறந்த அக்கற்புடைய மாதர், தமது கொழு நருடைய பாதங்கழுவிய நீரைக் கங்காசலமெனவும், அக்கொழுநரை [பிரபஞ்சத்தை உண்டுபண்ணிக் காத்து அழிக்கின்ற] பிரமா, விட்டுணு, உருத்திரன், ஆகிய மூன்று மூர்த்திகளில் காத்தற் றொழிலுடைய சத்துவ (விட்டுணு) மூர்த்தியெனவும், நிச்சயித்திருப்பார். எ-று. (உ௩)

கொழுநரை விட்டுணு மூர்த்தியேயென்று நிச்சயித்து, எப்பொழுதும் மனத்தாற் றியானித்தலும், அவர் கால் கழுவிய நீரைக் கங்கா சலமேயென நிச்சயித்துச் சிரசிற் றெளித்துக் கொள்ளுதலும், செய்வாரென்பது கருத்து.

அ-கை. [கற்புடை மாதர் சூதக காலத்திருக்கு முறைகூறுதல்].

ஆன்ற கற்பினர் பூப்பி னகன்று றை
மூன்று நாளு முகமலர் காட்டல ர்
தோன்ற யாதுஞ்சொல் லார்புன றோய்ந்தபி ன்
சான்ற காதலர் தம்முக நோக்குவா ர். (உ௪)

மேலும் மாட்சிமையுடைய கற்புமாதர் ஒவ்வொரு மாதங்களிலும், சூதகமுண்டான காலத்தில், வீடுவிட்டு விலகியிருக்கின்ற மூன்று நாட்களிலும், மாட்சிமையுடைய கொழுநர் கண்ணுக்குத் தோன்றும்படி எதிர்ப்படமாட்டார், அவர் காது கேட்கும்படி யாதொரு வார்த்தையும் பேசார், ஸ்நானஞ்செய்தவுடன் அவர் முகத்தைப் பார்ப்பார்கள். எ-று. (உ௪)

அ-கை. [கற்புடைமாதர் சூதக நிவிர்த்தி ஸ்நான முறை கூறுதல்.]

புனித மாநதிப் பூம்புன லாடு நா
ளினிய காதலர் வேற்றிட மெய்தி டி
லனைய கேள்வரை யன்பின் மனக்கொ டு
பனிவி சும்பிற் பரிதியை நோக்குவா ர். (உரு)

மேலும் பரிசுத்தத்தைத் தருகின்ற நதி நீராடுங்காலத்தில், தமது கொழுநர் வேற்றிடங்கட்குப் போயிருந்தாராயின், அவரை அன்புடன் மனத்தாற் றியானித்துக்கொண்டு, சூரியபகவானைத் தரிசிப்பார். எ-று. (உரு)

அ-கை. [கற்புடை மாதருக்கு விருப்ப முளதாகு மிடமும் இம்மையின்பமுங் கூறுதல்.]

தாதை தன்னினுந் தன்னையர் தம்மி னு
மாதர் மென்மொழி மைந்தர்க டம்மினு ங்
கோதில் கற்புடை யார்தங் கொழுநர்பா ற்
காதல் கூர்ந்து களிமகிழ் வெய்துவா ர். (உசு)

மேலும் குற்றமில்லாத கற்புடையமாதர், தமது தந்தையினிடத்தினும், தாய்மாரிடத்தினும், அழகிய மிருதுவான மொழிகளையுடைய புத்திரரிடத்தினும், உள்ள விருப்பத்தைக் காட்டிலும், கொழுநரிடத்து விருப்பம்பெருக, அவரால்மிகுந்த சுகமடைவார். எ-று. (உசு)

காதல்கூர்ந்து என்பது மழை பெய்து நெல் விளைந்தது என்றாற்போல, இறந்தகாலப் பொருட்டாய் வந்த செயவெனெச் சத்திரிபு.

கற்புடை மாதருக்குக் கணவரிடத்துக் காதல் மிகுதி கூறுவார், அதனை "காதல் கூர்ந்து களிமகிழ் வெய்துவார்" என அவராலடையப்பட்ட சுகத்தின்மேல் வைத்துக் கூறினார். அவ்வாறு கூறினும், கற்புடை மாதருக்குக் கணவர்மீது காதல் மிகுதியுளதாமென்பது கருத்தாகக் கொள்க.

ஆகவே இக்கவியால் கற்புடை மாதருக்கு விருப்ப மிகுதியா யுளதாகுமிடமும் அதனல் இம்மைச் சுகமும், கூறப்பட்டன.

மறுமைச் சுகம் (௩௯)-வது கவியிற் கூறப்படும்.

அ-கை. [கணவனோடிறக்க முயற்சித்த பெண்கள், தமது பிராரத்த வலியால் நேரிட்ட தடைகளாற் றடுக்கப்பட்டு, உயிர் வைத்திருப்பின், அவர்க்குளதாகும் பயன் கூறுகின்றார்.]

மருவு காதல ராருயிர் மாய்ந்தி டி
லெரியின் மூழ்கி யிறந்து படுவத ற்
கருநெ றித்தலை வைக்கு மரிவைய ர்
புரவி நன்மகப் பேறு பொருந்துவா ர். (உஎ)

தம்மோடு கூடியிருந்த கொழுநர் உயிர்விட் டிறந்தாராயின், அவருடனே தாமும் அக்கினியிற் குளித்திறப்பதற்காக, யாவருஞ் செய்தற் கருமையாகிய, அம்மார்க்கத்தில் மனமொருமைப்பட்ட பெண்கள், அசுவமேத யாகம் பண்ணினோ ரடையும் பயனை யடைவார்கள். எ-று. (உஎ)

அ-கை. [அக்கினி மூழ்கிக் கணவனுடனிறந்த மாதாது கற்பின் வலியும் அதன் பயனுங் கூறுதல்.]

முற்று செந்தழன் மூழ்கிய கற்பினோ ர்
புற்ற ராக்கொடு புள்ளா சேகல் போ
லெற்று கால படர்கை பறித்தி னி
துற்ற கேள்வ ரொடும்பரி னேகுவா ர். (உஅ)

கொழுநர் இறந்தவுடனே தாமும் அக்கினியின் மூழ்கி இறந்த கற்புடைய பெண்கள், ஓர் கருடன் காவில் அகப்பட்டுள்ள புற்றில் வசித்தற்குரிய சர்ப்பத்தை, மற்றோர் கருடன் அடித்துப் பறித்துக் கொண்டு செல்லுதல்போலச், சர்வப் பிராணிகளையும் அடித்துக்

கொண்டு செல்கின்ற இயம தூதுவர் கையினின்றும் தமது கொழுந ரைப் பறித்துக்கொண்டு, அத்துணைவரோடு கூடிச் சுவர்க்கவுலகஞ் சேர்வார். எ-று. (உஅ)

அ-கை. [இதுவுமது]

கொழுநன் பாவி யெனினுங் கொழுந னோ
டழலின் மூழ்கினள் கற்புடை யாளெனின்
விழியி லன்னவட் காணில்வெங் கூற்று வ
னழுவ லன்பனைக் கைவிடுத் தோடுமே. (உகூ)

கொழுநன் பாவச் செயலுடையவனாயிருந்தாலும், அவனிறந்த பொழுது, அவனுடன் அக்கினி மூழ்கி இறந்தவள் கற்புடையளாயி ருப்பின், அந்தப் பாவியைப் பிடித்துச் செல்கின்ற கொடிய கூற்று வன், அக்கற்புடையாளைக் கண்ணாற் பார்த்தவுடனே, அவளால் விடாது தொடரப்பட்ட அன்புடையவனான அந்தப் பாவியை விட்டு விட்டு அவன் கண்ணிற் புலப்படாமற் பயந்தோடி விடுவான். எ-று. (உகூ)

அ-கை. [கற்பின் சிறப்புக் கூறுதல்.]

வடபு லத்து வயங்கு மருந்ததிக்
கடவுட் கற்பினர் காந்திதங் கண்ணுறிற்
படர்சி கைக்கனல் வெங்கதிர் பான்மதி
சுடர்ம ழுங்கிப் பொலிவில தோன்றுமால். (௩௰)

வடதிசையின் கண்ணிருந்து பிரகாசிக்கின்ற, அருந்ததி முத லிய தெய்வத்தன்மை வாய்ந்த, கற்பு மாதர்களுடைய பிரகாசமா னது, மேற்கூறிய இலக்கணங்களையுடைய அக்கற்புடைய மாதர் கண்ணிற் படுமானால், வெப்பத்தோடு கூடிவிரிந்த கிரணங்களை யுடைய சூரியன்முன், வெண்மையாகிய சந்திரன் பிரகாசமற்று விளங்கினாற்போலப், பொலிவிழந்து தோன்றும். எ-று. (௩௰)

அ-கை. [கற்புமாதரா லடையப்படும் மறுமைப் பயன்கூறுதல்.]

நீடு காதல ஞேடுயிர் நீத்திடு ம்
வீடில் கற்பினண் மெய்ம்மயி ரொன்றினு க்
காட கப்பசும் பொன்னிலத் தாயிர ங்
கோடி காலங் கொழுநஞே டின்புறு ம். (௩௧)

தங்கொழுநன் இறந்தபொழுது தானும் உடனிறந்த கெடாத கற்புடையவள், தனது சரீரத்தில் எத்தனை யுரோமம் இருக்கின்றனவோ, அந்த ஒவ்வொரு உரோமத்திற்கு ஆயிரங்கோடி தேவவருடம் தனது கொழுநஞேடு கூடிச் சுவர்க்கலோகத்தில் இன்பம் அனுபவிப்பாள். எ-று. (௩௧)

அ-கை. [கற்பு மாதரால் அவர் முன்னேருக் குளதாகும் பயன் கூறுதல்.]

கற்பு மேய கனங்குழை மாதரை ப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவ க்
கற்பி ஞற் கொண்ட காதல ஞருயிர் ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தி னெய்துமா ல். (௩௨)

கற்புடைய மாதர் தாய்மரபிலும், தந்தைமரபிலும், கொழுநர் மரபிலும், இறந்தவரனைவரும் அவர்கற்பின் மகிமையால் சுவர்க்கலோகத்தை யடைந்தின் புறுவார்கள். எ-று. (௩௨)

அ-கை. [கற்பு மாதர் சிறப்புக் கூறும் வழியாக அவராற் சாரப்படும் பொருள்கட்குளவாம் பயன் கூறுதல்.]

நண்ணு கற்புடை நங்கையர் சிற டி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்ற ஃ
தெண்ணுகின்ற தலங்க ளெவற்றினு ம்
புண்ணி யத்தல மென்று புகல்வரா ல். (௩௩)

கற்புத் தன்மை யமைந்த பெண்களுடைய சிறிய பாதங்கள், பூமியில் எவ்விடத்துப் பட்டாலும், அவ்விடங்களெல்லாம், புண்ணிய க்ஷேத்திரமென்று கருதுகின்ற எல்லாவற்றுள்ளும், மிகுந்த புண்ணிய க்ஷேத்திரமென்று அறிந்தோர் சொல்லுவர். எ-று. (௩௩)

அ-கை. [இதுவுமது]

கவ்வை வெண்டிரைக் கங்கை முதலவா ந்
தெய்வ மாநதி யாவுஞ் செறிந்தத ம்
எவ்வ மற்றிடக் கற்பி னிமைந்தி டு
நவ்வி நோக்கிய ராட நயக்குமா ல். (௩௪)

சத்திக்கின்ற வெள்ளிய அலைகளையுடைய, கங்கை முதலாகச் சொல்லப்பட்ட, தெய்வத்தன்மை பொருந்திய நதிகளெல்லாம், தம்மிடத்துப் பொருந்தியுள்ள குற்ற நீங்குவதற்காக, மான்போன்ற விழியுடைய கற்புடைய மங்கையரைத், தம்மிடத்து எப்பொழுது மூழ்க வருவாரென்று விருப்பமுடன் எதிர்பார்த்திருக்கும். எ-று.(௩௪)

அ-கை. [இதுவுமது]

மண்ணு நன்மணி வேய்ந்து வயங்கி ய
வண்ணன் மாடங்க ளாயினுங் கற்புடை ப்
பெண்ணி னல்லவ ரில்லெனிற் பேய்க்க ண
நண்ணு கின்றவனமென நாட்டுவா ர். (௩௫)

நல்ல இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பிரகாசிக்கின்ற பெரிய மாளிகைகளானாலும், கற்புடைய பெண்கள் வசிக்காவிடில், அவையெல்லாம் பேய்கள் கூடிவசிக்கின்ற மயான மென்றே அறிஞர்கள் நிச்சயிப்பார். எ-று. (௩௫)

அ-கை. [இதுவுமது]

காற்றும் வெய்ய கனைகதி ருங்கட ற்
ரேற்று தண்ணில வுச்சுடர்த் திங்களு ம்
போற்று கற்பிற் புரிகுழற் பூங்தொ டி
மேற்றெரு டும்பொழு துள்ளம் வெருவுமால். (௧௬)

காற்றும். வெப்பநிறைந்த கிரணத்தையுடைய சூரியனும், குளிர்ந்த கிரணத்தையுடைய சந்திரனும், யாவராலுந் துதிக்கப்பட்ட கற்புடைய மாதர் சரீரத்தைத் தொடும்பொழுது, அஞ்சுவனவாம். எ-று. (௧௬)

எனவே தெய்வங்களும் கற்புடையமாதர் கருத்தின்படியே செய்யும் என்பதாம். இதுபற்றியே, தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" எனக்கூறினர்.

அ-கை. [மங்கலத்தை யிழந்து உயிர் வைத்திருக்கும் மடவாரிடத்துள்ள இழிபு கூறுகின்றார்.]

மேவு காதலன் வீயப் புனல்பொ ழி
காவி யங்கட் கலன்கழி மாத ரை
யாவி நீத்துக் கிடந்திடும் யாக்கைபோ ல்
யாவ ருந்தொட றீதென் றியம்புவா ர். (௧௭)

தமது உடலினிடத் துயிர்போற் கலந்திருந்த காதலன் இறக்க, அதனுல் கண்களில் நீர்பெருக வருந்தி, மங்கலமிழந்து, உயிர் வைத்திருக்கின்ற மடவாரை, உயிர் நீங்கிய சரீரம்போல எண்ணி யாவருந் தொடுதல் குற்றமென்று கூறுவார். எ-று. (௧௭)

உடலானது உயிர் நீங்கியபின் பிணமெனப்படுதலின், அதனைத் தொடுதல் குற்றம்; ஆதல்போலப் புருடன் நீங்கிய ஸ்திரீயைத் தொடு

தலும் அவ்வாறுமெனக்கூறினர். இதனால் கணவன் உயிர்நீங்கிய பின் தான் உயிர் வைத்திருக்க லாகாதென்பது கருத்து.

அ-கை. [உடற்பற்றினாற் கொழுநருடனிறக்க முடியாமல் உயிர் வைத்திருக்கும் விதவையர்க்கு விதி கூறுதல்.]

மருவு காதலன் மாய்ந்திடின் மங்கைய
ரொருப கற்பொழு துண்டரும் பாக்கிலை
விரியும் பாயில்வெ றுத்துமண் மேற்றுஞ்சி
யரிய நோன்புக ளாற்றிட வேண்டுமால். (கஅ)

கொழுநர் இறந்தபின் உயிரோடிருக்கும் பெண்கள், பகல் ஒருபொழுது மாத்திரமுண்டு, வெற்றிலை பாக்குத் தின்னாமல், வெறுந் தரையிற் படுத்து நித்திரை செய்து, அரிதாகிய விரதங்களை அனுட்டிக்க வேண்டும். எ-று. (கஅ)

அ-கை. [இதுவுமது]

சுடர்செய் பொற்கல னீத்திடுந் தோகையர்
கடவுட் பூசனை காதலி னாற்றியு
முடல மாசுண வுள்ளுயிர் நீத்திடா
தடகு மூல மருந்திட வேண்டுமால். (கக)

மேலும் கைம்பெண்கள் மேற்செய்யுளிற் கூறிய பிரகார நடப்பதோடு, கடவுட் பூசனையுமியற்றித் தம்மால் விடமுடியாத உயிர் நீங்கா திருத்தற்காக, மேலைக்கவியிற் கூறிய ஒருபொழு துண்ணும் உணவும், இலைகளுங் கிழங்குகளு மாகப் புசிக்க வேண்டும். எ-று. (கயக)

இதனால் உயிர் நீங்கா திருத்தற்காக உண்ண வேண்டுவ தன்றி, உருசியை விரும்பி, உடல் பெருத்தற்காக, உண்ணலாகா தென்பது பெறப்பட்ட வாறறிக.

அ-கை. [மேல் விதிப்படி நடப்பவர்க்கு வரும் பயன் கூறுகின்றார்.]

எரிசெய் பொற்கல னீத்தவ ரின்னணம்
விரதம் பூண்டு விழுத்தவ மாற்றிடிற்
பரவு கின்ற பதியுல கெய்துபு
பொருவி லாவரும் போக நுகர்வரால். (சo)

மாங்கல்லிய மிழந்தபெண்கள், மேற்கூறிய பிரகாரம் விரத வொழுக்கம் பூண்டு, மேலான தவத்தைச் செய்வாராளுல், தொழத் தகுந்த, தமது கொழுநர் வசிக்கின்ற, உலகத்திற் ருமுஞ் சென்று, ஒப்புயர்வில்லாத போகங்களை, அவரோடுகூடி யனுபவிப்பார்கள். எ-று. (சഡ)

அ-கை. [இனிக் கற்பில்லாத மாதர் செயலும் அவரடையும் பயனும் கூறுகின்றார்.]

உரிய கேள்வ ருவந்து பணித்திடா
தரிய நோன்போடு பூசனை யாற்றுவார்
கரிய கூற்றுவன் றூதர் கடிந்திட
வெரியுந் தீநர கத்திடை யெய்துவார். (சக)

தமக்குரிய கொழுநர் செய்யும்படி மனமுவந்து சொல்லாதிருக்கத் தாமே, நோன்பு, கடவுட்பூசை, முதலியவற்றை யியற்றும் பெண்கள், கரியநிறத்தையுடைய இயமன் றூதுவர் தண்டித்து வீழ்த்த, எரிந்துகொண்டிருக்கிற, அக்கினி நரகத்தில் விழுந்து வருந்துவார். எ-று. (சഡக)

அ-கை. [இதுவுமது]

கடிம ணஞ்செயுங் காதலர் தம்பழி
மடமை யோடு மொழிபவர் மற்றவ
ருடன்வெ குண்டுரை யாடுனரோரியாய்
முடுவ லாகப் பிறப்பர் முடிவினே. (சஉ)

தம்மை அக்கினி சாக்ஷியாக மணஞ்செய்த, கொழுநரிடத்துள்ள குற்றங்களைப் பிறரிடத்துக் கூறுபவரும், தமது கொழுநரிடத்துக் கோபித்துப் பேசுபவரும், ஆகிய இப்பெண்கள் [அச்செயல்களுக்குப் பயனாகிய நரகத்துன்பமனுபவித்து முடிந்தபின்பு,] நரியாகவும், நாயாகவும், பிறப்பார். எ-று. (சயஉ)

நரகத்துன்பம் அனுபவித்து முடிந்தபின்பு என்பதனைப் பின்னிரண்டு செய்யுட்கும் கூட்டப்படும்.

அ-கை. [இதுவுமது]

கொழுநர் சிறிற் குறுகி முன்வைப வ
ருழுவை யாகப் பிறப்ப ருருத்துநெ ஞ்
சழல் மாற்றவட் சிறு மறிவிலோ ர்
கழல்கட் கூகைப் பிறப்பிற் கழிவரா ல். (சங)

கொழுநர் கோபித்தால் அவரை யெதிரில் நின்று வையும் பெண்கள், புலியாகவும், மாற்றாளை மனங்கன்றுமாறு கோபிக்கும் அறிவிலாப் பெண்கள், கூகையாகவும், பிறப்பார்கள். [நரகத்துன்பம் அனுபவித்தபின்பு.] எ-று. (சங)

அ-கை. [இதுவுமது]

ஏதி லான்ற னெழில்கண் டுவப்பவ ர்
பேது செய்துழல் பேயுரு வெய்துவா ர்
காத லன்பசிக் கக்களித் துண்பவ ர்
பாத கஞ்செயும் பன்றியிற் றோன்றுவா ர்.[சச]

அயற் புருடனுடைய அழகைக்கண்டு மகிழும் பெண்கள், தன்னாற் பற்றப்பட்டவரை மதிமயங்கச் செய்கின்ற பேய்வடிவத்தையும், கொழுநர் பசித்திருக்கத் தாமகிழ்ச்சி யடைந்துண்பவர், பாவச் செயலின் பயனாகிய பன்றிப்பிறப்பையும், அடைவார்கள். [நரகத் துன்பம் அனுபவித்தபின்பு.] எ-று. (சச)

அ-கை. [இதில் இறந்த மூன்று மரபினருக்கும் வியபிசார மாதரால் வரும் தீங்கு கூறுகின்றார்.]

பொருவில் கற்பின் வழீஇயபுன் மங்கை யரூரிய மூன்று மரபினுள் ளோரையு ம்
வெருவர் தேங்க விழுங்கி யுமிழ்கி லா
வெரியுந் தீநர கிற்குடி யேற்றுவா ர். [சரு]

கற்பழிந்த அற்பச் செய்கையுடைய மாதர், தமக்குரித்தாகிய தாய்மரபு, தந்தைமரபு, கொழுநர்மரபு என்னும், மூன்று மரபிலுமிறந்தவர் அனைவரையும், அஞ்சி வருந்தும்படி, தன்னுள் விழுந்தவரை, வெளியேறவொட்டாமல், எரிந்துகொண்டிருக்கின்ற அக்கினி நரகத்தில் வீழ்த்துவார்கள். எ-று. [சமஙு]

அ-கை. [அன்னியருக்குத் தீமைதருங் காரணம்பற்றி, அமங்கலிகளைக் காட்டிலும் வியபிசார மாதரிடத்துள்ள இழிபின் மிகுதி கூறுகின்றார்.]

மாற்ற ருங்கல னீத்த மகளி ரை
யாற்றெ திர்ப்படி னேகல ராகலா ற்
போற்றி வாழ்த்துதல் பூண்கழி மாதரி ல்
வேற்று மாதர்சொல் வெவ்விட மென்பரால். [சகூ]

எப்பணிகளை நீக்கினுலு நீக்கக்கூடாத, மாங்கல்லிய மிழந்த கைம்பெண்களை, வழிச்செல்வோர் எதிரிற் கண்டால், தாம்செல்ல வேண்டிய இடத்துக்குச் செல்லாமல் நின்றுவிடுவார், அதுபோலக் கைம்பெண்களுக்குங், கற்புமாதருக்கும், வேறாகிய கற்பழி மாதர்கள் சொல்லுஞ் சொல்லானது, வழிச்செல்வோரைச் சுகமாகப் போய்வாவென்று கூறும் வாழ்த்துச்சொல்லானாலும், கைம்பெண்களைப் போல,

அது அவ்வழிச் செல்வோர்க்குக், கொடியவிடம்போலத் துக்கத்தைக் கொடுக்குமென்று அறிஞர் கூறுவர். எ-று. (சமசு)

வாழ்த்துச்சொல் விஷம் என்றமையால் சாபச்சொல் (தீய சொல்) விஷம் என்பது சொல்லாமலே பெறப்படுதல் காண்க. இங்கே இழிபின் மிகுதியாவது அன்னியராற் சொல்லப்படின் நன்மை தரத்தக்க வாழ்த்துச் சொல்லும் இவராற் சொல்லப்பட்டவிடத்து விஷம்போலத் தீமை தரத்தக்க கொடிதுடமை.

அ-கை. [மங்கல மிழந்தபின் வழுவிய கற்புமாத ராலவர்க்கும் அவர் குலத்தார்க்கும் வருந்தீங்கு கூறுதல்.]

கைம்மை யாகிய கற்புடை மங்கைய ர்
தம்மொ ழுக்கந் திறம்பிடிற் றும லா
லம்ம தங்குலத் தோரையு மாரழ ல்
வெம்மைசேர்நர கத்திடை வீழ்த்துவா ர். [சஎ]

மாங்கல்லிய மிழந்த கற்புடைய மாதர் தமது ஒழுக்கத்தினின்றுந் தவறுவா ராஞல், அவர்தா மாத்திர மல்லாமல், தமது குலத்தவரையும், கொடிய நிரகத்தில் வீழ்த்துவார்கள். எ-று. (சஎ)

அ-கை. [விதவையர் வைத்திருக்கும் கூந்தலால் வரும் கேடு கூறுதல்.].

நிழல்செய் பொற்கல னீத்த மடந்தைய ர்
குழலி னேக்குறை யாது முடித்திடி ல்
அழல்கட் கூற்றுவன் றாதர்மற் றுங்கவ ர்
விழையுங் கேள்வினைப் பாசத்தில் வீக்குவா ர். [சஅ]

மாங்கல்லிய மிழந்த பெண்கள் தமது கூந்தலை யெடுத்துவிடாமல் வைத்து முடிப்பாராஞல், கூந்தலுடைய அவரையும், அவரால்

விரும்பப்பட்ட கொழுநனையும், கோபக்கண்களையுடைய இயமதூதுவர் பாசத்தாற் கட்டி வருத்துவார். எ-று. (சஅ)

"அவர் விழையுங் கேள்வனை வீக்குவார்' எனவே அவரை வீக்குதல் சொல்ல வேண்டாவாயிற்று.

அ-கை. [வியாழபகவான் இத்தன்மைய முதன்மையான கற்புத் தன்மையுடை உலோபா முத்திரை யம்மையைப் புகழ்ந்து துதித்தல்.]

இன்ன வற்று ளியம்பிய கற்பி ய
லன்னை நின்னிடத் தெய்தின ளாத லி
னுன்னை யேத்தி வினையொழிந் தோமெ ன
மன்னு மாதவன் பன்னியை வாழ்த்தின ன். [சகூ]

இத்தன்மைய கற்பிலக்கணங்களுள், மேலாகக் கூறிய கற்புத் தன்மை அமைந்த, உலோபா முத்திரை யென்னுந் தாய் உமக்கு மனைவியாகக் கிடைத்தனள், ஆதலால், உம்மைத் துதித்து, நாங்கள் எமது கரும பந்தங்களினின்று நீங்கினோமென்று கூறி, அவர் பக்கத்திருந்த அவரது மனைவியை, வியாழபகவான் வாழ்த்தினர். [சகூ]

அ-கை. [உலோபா முத்திரையைத் துதித்த தேவகுருவானவர் அகத்திய முனிவரையும் உபசரித்துப் புகழ்கின்றார்.]

பொருவில் கற்புடை யாள்பதம் போற்றி ய
தெருளு நெஞ்சுடை விண்ணவர் தேசிக ன்
முரிதி ரைக்கட லுண்ட முனிவனை ப்
பரவி யின்மொழி பற்பல கூறுவா ன். [ருഠ]

ஒப்பற்ற கற்புடையவளாகிய, உலோபாமுத்திரை யம்மையினுடைய திருவடிகளில் வணங்கிய, தெளிந்த மனதுடைய தேவகுரு

வானவர், அகத்திய முனிவரையுந் துதித்து, இனிய உபசார மொழி கள் பற்பல கூறத் தொடங்கினர். எ-று. [ருய]

அ-கை. [இதுவுமது]

குடிலை நீயிவள் கோதறு மாம றை
வடிவி னற்றவ நீயிவள் வான்பொ றை
யடிக ளாதலி னின்னுளத் தாயுங்கா ல்
முடிவு றாதன வில்லை மொழியி னே. [ருக]

தலைமைவாய்ந்த உங்கள் இருதிறத் தீரையும் பற்றிச் சொல்லப் புகின், நீர் பிரணவ சொரூபி யாவீர், இவ்வன்னை யானவள் அப்பொருளை யுணர்த்தும் குற்றமற்ற வேதமாவள், நீர் அழகிய நல்ல தவமாவீர், இவ்வன்னை அதற்குச் சாதனமாகிய பொறுமையாவள், ஆதலால் உமதுள்ளத்தால் ஆராய்ந்து செய்யின் முடிவு பெறாத விஷயம் ஒன்றுமில்லை. எ-று. [ருக]

அ-கை. [தேவகுருவானவர் அகத்தி[illegible]ம் தேவர்களுக்கு விந்தமலையா[illegible] இடுக்கண் [illegible].]

ஐய வானத் தமர[illegible] ஞ்
செய்வ தொன்ற[illegible] ற
மையல் விந்தம் வளர்ந்தது வானு ற
வெய்ய வன்றடந் தேரை விலக்கி யே. [ருஉ]

ஐயனே, தேவர்களனைவரும் உலகத்தில் யாகாதி சற்கருமஞ் செய்தலால் அடையும் பயன் யாதொன்று மடையப் பெறாதவராய், நடுக்கமடையுமாறு, விந்தமலையானது, நாரதர் வார்த்தையால் மோகமடைந்து, சூரியன் றேரை ஆகாய வழியிற் செல்லவொட்டாது, வளர்ந்து தடுத்துவிட்டது. எ-று. [ருஉ]

அ-கை. [ஆகையால் நீரே அவ்விந்த.
கித் தேவர் குறை தீர்த்தருள வேண்டுமெனக்

பொன்னங் குன்றொ டிகலிவின் போ
ரன்ன வெற்பின் வலியை யடக்கு வா
முன்ன மேகட லுண்ட முனிவ
நின்னை யன்றி நிகழ்த்திடின் யாவ ரே. [

மேருமலையோடு பகைத்து, ஆகாய மறையும்படி வளர்ந்து நின்ற, அந்தவிந்த கிரியின் வலியை அடக்குபவர், முன்னோர் காலத்தில் சமுத்திர ஜலத்தை எல்லாம் தமதுள்ளங்கையில் உழுந்தமிழ்ந்து மளவாக அடக்கும்படி செய்து பருகிய, உம்மை யல்லாமல், சொல்லுவதற்கு வேறே யாவரிருக்கின்றார், ஒருவருமிலர். எ.று. [ருந]

அ-கை. [குறையிரந்த தேவாதிகட்கு அகத்திய முனிவர் விந்த கிரியின் வலியை யடக்குவதாய் வாக்களித்தல்.]

என்று தேவர் குரவ னிசைத்தலு ங்
குன்றின் வீக்கங் குறைப்ப லமரர்நீ ர்
சென்று நம்பதி சேர்கென வோதின ன்
றுன்று வேலை பருகிய தாபவ ன். [ருச]

ஆதலால் நீரே, அம்மலையின் வலியை யடக்கித், தேவர் குறையைத் தீர்த்தருளவேண்டுமென்று, தேவகுருவானவர் கூறக்கேட்டுக், கடல் பருகிய அகத்திய முனிவர், அவ்விந்தகிரியின் கருவத்தை, யான் அடக்கிவிடுகின்றேன், தேவர்களாகிய நீவிரனைவரும், உமது பதிக்குச் செல்லுகவென்று கூறித், தேவர்களுடைய அச்சத்தைத் தவிர்த்தருளினார். எ-று. [ருச]

கற்பிலக்கணங் கூறிய அத்தியாயம்.
முற்றிற்று.

...க்கணங் கூறிய அத்தியாயம்

...முதற்குறிப் பகராதி

பாட்டு முதற்குறிப் பகராதி முற்றிற்று.